## 2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் திரு. எஸ். டி. உகம்சநத் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) பேரவைக்கு அறிவிப்பதற்கு முன்னாலே எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் வரும்? இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் வராது.

திரு. துரை ராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமருங்கள் பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ''செங்கை அண்ணா மேற்கு மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து வந்துள்ள கீழ்க்கண்ட செய்தியினைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

''I have the honour to inform you that Thiru S.D. Ukamchand, Member of the Tamil Nadu Legislative Assembly, representing Maduranthagm Assembly Constituency, has been arrested along with 32 others on the night of 23 April, 1989 at Maduranthagam in connection with the Maduranthagam Police Station C.R. No. 201/89 under Sections 147, 148, 332 of I.P.C. and under Section 213 of the Tamil Nadu Public Properties (Prevention of Destruction and Damages' Act, 1982.)

## 3. தகவல் கோரல்.

(அ) இந்தியப் பிரதமர் பெங்களூரில் கூட்டியுள்ள தென்மாநிலப் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் மாநாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொள்வது குறித்து.

திரு. கே. ரமணி: தலைவர் அவர்களே. நான் அரசிடமிருந்து—குறிப்பாக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள்— அரசாங்கத்திடமிருந்து ஒரு விளக்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். தென்பகுதியில் இருக்கும்படியான மாநிலங்களைச் சேர்ந்த ஆந்திர மாநிலம், கர்நாடக மாநிலம், கேரள மாநிலம், தமிழகம் ஆகிய இந்த மாநிலங்களைச் சேர்ந்த பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடைய மாநாட்டை, பெங்களூர் நகரத்திலே இந்தியாவினுடைய பிரதம அமைச்சராக இருக்கக்கூடிய திரு. ராஜீவ் காந்தி அவர்கள் மத்திய அரசாங்கத்தின் சார்பிலே கூட்டியிருக்கிறார்கள். இது நாம் எல்லோரும் அறிந்திருக்கிற உண்மை. அண்மையிலே நடந்த நிகழ்ச்சிகளின் காரணமாக, ஆந்திர மாநில அரசும், கேரள மாநில அரசும் அந்த மாநாட்டிற்குச் செல்வதில்லை. அந்தப் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மாநாட்டிலே பங்கெடுத்துக் கொள்வதில்லை என்று

முடிவு எடுத்து, பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. நமது மாநில அரசாங்கம் என்ன நிலைப்பாட்டை எடுத்துள்ளது என்பதை அருள்கூர்ந்து நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அந்த மாநாட்டில் தமிழக அரசின் சார்பிலும் கலந்து கொள்வதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

**(ஆ) எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தாக்கப்பெற்றதாக கூறப்படுவது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம். (குறுக்கீடு).

**திரு. துரை ராமசாமி :** ஸ்பீக்கர் சார், திரு உகம்சந்த் வீட்டிலே அடித்துக் கொண்டு போய் இருக்கிறார்கள்........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரை ராமசாமி அவர்கள் கவனிக்கவேண்டும். இது தொடர்பாக நீங்கள் காவல் துறை அமைச்சராக இருக்கின்ற முதலமைச்சரோடு நேரடியாகப் பேசவும். திரு. பி. வி. இராஜேந்திரன், (குறுக்கீடு).

**திரு. பி. வி. இராஜேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. துரை ராமசாமி அவர்கள் கவனிக்கவேண்டும். அறிவிப்பிலே பேரவைத் தலைவர் உள்ளடக்கத்தை எல்லாம் சொல்லமாட்டார். அறிவிப்பை மட்டும்தான் சொல்வார். இதுதொடர்பாக ஏதேனும் தெரிந்து கொள்ள விரும்பினால் முதலமைச்சர் அவர்களிடம் தெரிந்து கொள்ளலாம். (குறுக்கீடு).

**திரு. துரை ராமசாமி :** லத்தி சார்ஜ் வீட்டிலே போய்ப் பண்ணியிருக்கிறார்கள். ஃபோட்டோ இருக்கிறது. (ஒரு புகைப் படத்தைக் காட்டினார்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முதலிலே என்னிடம் இசைவு கேட்காமல் புகைப்படத்தை அவையிலே காட்டுவதே தவறு என்ற குறிப்பை உணரவேண்டும். அதனாலே முதலமைச்சர் அவர்களிடம் கேட்கலாம். (குறுக்கீடு) பேரவைக்கு அறிவிப்புச் செய்கிறபோது இதெல்லாம் எழுப்பக் கூடாது என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். (குறுக்கீடு). படத்தைக் காட்டுவது என்றால் நீங்கள் என்னிடம் இசைவு கேட்டு, அதற்குப்பிறகு முதலமைச்சரிடம் நேரடியாகக் காட்டி இருக்கவேண்டும். முதலமைச்சரிடம்